**பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஓர் ஊரில் ஒரு வெள்ளைப் புறா இருந்தது. அது ஒரு காகத்தைக் கண்டது. காகம் கறுப்பாக இருந்தது. "நானும் கறுப்பாக இருந்தால் எவ்வளவு நல்லது" என்று புறா நினைத்தது. இதனால் அது கறுப்புச் சாம்பலில் புரண்டு புரண்டு பார்த்தது. சாம்பலை உடல் முழுவதும பூசியது. ஆனால் கறுப்புப் புறாவாக மாற முடியவில்லை. புறாவிற்கு மிகவும் கவலையாக இருந்தது. இதைப் பார்த்த காகம் "நண்பா, உன் நிறம் வெள்ளை. என் நிறம் கறுப்பு. இரண்டும் அழகான நிறங்கள் தான். நாம் நிறத்தில் வேறானாலும் நல்ல நண்பர்களாக இருக்கலாம்" என்று ஆறுதல் கூறியது.

i. காகத்தின் நிறம் என்ன?

________________________________________

ii. புறாவின் நிறம் என்ன?

________________________________________

iii. புறா ஏன் கறுப்பாக மாற விரும்பியது?

________________________________________

iv. கறுப்பாக மாறுவதற்கு புறா என்ன செய்தது?

________________________________________

v. காகம் புறாவிற்கு என்ன சொன்னது?

________________________________________